## மாமன்றக் கூட்டம்

| | | |
|---|---|---|
| **கோப்பு எண்** | - | **ந.க.எண் 9548/2021/ எம்.சி. 8** |
| **நாள்** | - | **13.01.2022 பிற்பகல் 3.00 மணி** |
| **தலைமை** | - | **திரு.ராஜ கோபால் சுன்கரா, இ.ஆ.ப.,<br>ஆணையாளர் மற்றும் தனி அதிகாரி,<br>கோயம்புத்தூர் மாநகராட்சி** |
| **கலந்துகொள்வோர்** | - | **துணை ஆணையர்,<br>அனைத்து துறை தலைமைகள்,<br>அனைத்து மண்டல உதவி ஆணையர்கள்** |

---

### பொருள் எண் 1

**பொருள்** பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளர் – தனிஅலுவலராக பொறுப்பேற்றது – பதவிக்காலம் நீட்டிப்புக்கு தமிழ்நாடு சிறப்பு அரசிதழ் வெளியிடப்பட்டது – மன்றத்திற்கு சமர்ப்பித்தல் – தொடர்பாக.

**பார்வை** தமிழ்நாடு சிறப்பு அரசிதழ் எண்.625 நாள்.31.12.2021 அறிவிக்கை எண்.5

---

பார்வையில் காணும் தமிழ்நாடு சிறப்பு அரசிதழின் அறிவிக்கை எண்.5ன்டி கோயம்புத்தூர் மாநகராட்சியில் தனி அலுவலர் அவர்களின் பதவிக்காலம் **01.01.2022** முதல் **30.06.2022** வரை ஆறுமாத காலம் நீட்டிப்பு செய்து உத்திரவு வெளியிடப்பட்டுள்ளது.

எனவே கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் தனி அலுவலராக **01.01.2022** முதல் **30.06.2022** வரை நீட்டிப்பு செய்து வெளியிடப்பட்ட பார்வையில் காணும் சிறப்பு அரசிதழை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** – பதிவு செய்யலாம் (ந.க.எண்.**9129/2016**/எம்சி**2**)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 1 நாள் 13.01.2022**

பதிவு செய்யப்பட்டது.

---

### பொருள் எண் 2

| | |
|---|---|
| **பொருள் :** | பொது சுகாதாரம் - கோயம்புத்தூர் மாநகராட்சி - கோவிட் - 19 தடுப்பு நடவடிக்கை பணிகள் மேற்கொள்ளுதல் - வெளிமுகமை மூலம் 100 தற்காலிக செவிலியர்கள் நியமனம் செய்தது – 07.01.2022 முதல் காலநீட்டிப்பு வேண்டுதல் - தொடர்பாக. |
| **பார்வை** | ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் உத்தரவு நாள் 05.01.2022. |

----------

பார்வையில் காணும் ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் உத்தரவில் மேற்படி வெளிமுகமை மூலம் பணியமர்த்தம் செய்யப்பட்டு தற்பொழுது பணியில் உள்ள 50 செவிலியர்களின் பணிக்காலம் 06.01.2022 ல் முடிவடைதால், **மண்டலத்திற்கு தலா 10 வீதம் ஐந்து மண்டலத்திற்கும் மொத்தம் 50** செவிலியர்களின் பணியினை மட்டும் கோவிட் 19 தொற்று அதிகரித்து வருவதை கருத்தில் கொண்டு 07.01.2022 முதல் 28.02.2022 வரை மட்டும் கால நீட்டிப்பு செய்து பணியினை தொடர தெரிவிக்கப் பட்டுள்ளது.

எனவே, கோவிட் 19 மற்றும் ஒமைக்ரான் (Omicron) தொற்று நோயின் தாக்கம் அதிகரிக்க தொடங்கியுள்ளதாலும் தடுப்பூசி முகாம்கள் நடத்துதல், 15 முதல் 18 வயது வரை உள்ளவர்களுக்கு தடுப்பூசி செலுத்துதல் மற்றும் தினசரி காய்ச்சல் முகாம்களை நடத்துதல் போன்ற நோய் தொற்று தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதால், மெர்பிக்கல் கேரியர்ஸ் ஒப்பந்ததாரர் மூலம் வெளிமுகமை மூலம் பணியமர்த்தம் செய்யப்பட்டு தற்பொழுது பணியில் உள்ள 50 செவிலியர்களின் பணிக்காலத்தினை **பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி 07.01.2022 முதல் 28.02.2022** வரையில் காலநீட்டிப்பு செய்திடவும், அதற்கான மொத்த செலவினம் **ரூ.12,960 X 50 X 1.22 (ஒரு மாதம் 22 நாட்கள் = ரூ 11,23,200/-** (சேவைக்கட்டணம் சேர்த்து) ஐ கோவிட் 19 தடுப்பு நிவாரண நிதியிலிருந்து அல்லது பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு . அனுமதிக்கலாம். ந.க.எண். 4399/2021/எம்.இ.3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 2 நாள் 13.01.2022**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 3**

**பொருள்** இணைக்கப்பட்ட 40 வார்டு பகுதிகளில் PPP முறையில் தெருவிளக்ககுகளை அமைத்து இயக்கி பராமரிக்கும் பணி 10 ஆண்டுகளுக்கு மேற்கொள்ளுதல் – சீர்மிகு நகர திட்டம் மற்றும் இதர நியிதியில் பொருத்தப்பட்ட LED தெருவிளக்குகளை ESCO நிறுவனம் மூலம் பராமரிப்பு மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் – தொடர்பாக

**பார்வை**
1. மாமன்ற தீர்மான எண் 176 நாள்.27.07.2015.
2. உத்தேசித்துள்ள கடிதம் (LOA) நாள்.04.09.2015.
3. நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.17910/2018/IHSDP-3 நாள்.18.01.2019.
4. சீர்மிகு நகரத்திட்ட பணி உத்தரவு ந.களண்.48,49,50,51 & 52/2018/JN4/SCM, நாள்.06.03.2019 & 08.03.2019.
5. நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடித எண்.45490/DO1/ 2012 நாள்.14.09.2020.

*****

பார்வை 1-ல் கண்டுள்ள மாமன்ற தீர்மானத்தின்படி, மின் சேமிப்பு நிறுவனம் (ESCO) மூலம் மின் சேமிப்பு விளக்குகள் மற்றும் உபகரணங்கள் பொருத்தி 10 ஆண்டுகளுக்கு இயக்கி பராமரிக்கும் பணி ஆகஸ்ட் 2017 (Substantial Completion Month) முதல் நடைபெற்று வருகிறது.

பார்வை 3-ல் கண்டுள்ளபடி சீர்மிகு நகர திட்டத்தின்கீழ் இணைக்கப்பட்ட 40 வார்டு பகுதிகளில் 20,370 எண்ணிக்கையிலான LED தெருவிளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. இதர நிதியில் 8421 LED தெரு விளக்குகள் 2014 மற்றும் 2015–ம் ஆண்டு பொருத்தப்பட்டுள்ளன. PPP முறையிலும், சீர்மிகு நகரம் திட்டத்திலும் மின் சேமிப்பு நிறுவனம் மூலம் பொருத்தப்பட்டு தற்போது பயனிலுள்ள 2,432 சுவிட்சுகளில் கட்டுப்பாட்டில் மேற்படி 28,791 தெருவிளக்குகள் கூடுதலாக பொருத்தப்பட்டுள்ளன.

பார்வை 1-ல் கண்டுள்ள தீர்மானத்தின்படி, PPP முறையில் அமைக்கப்பட்ட 15w மற்றும் 20w LED தெரு விளக்குகளை இயக்கி பராமரிக்க 16.06.2015 அன்று பெறப்பட்ட ஒப்பந்தத்தில் விலை குறிப்பிடப்பட்டுள்ளது. சீர்மிகு நகர திட்டம் மற்றும் இதர நிதியில் அமைக்கப்பட்ட தெருவிளக்குகளுக்கு பார்வை 5ல் கண்டுள்ளபடி நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள விலை விகிதத்தின்படி இயக்கி பராமரிக்க வேண்டும். அதன் விபரம் பின்வருமாறு:

**(a) சீர்மிகு நகரம் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட தெரு விளக்குகளை இயக்கி பராமரிக்க ஆகும் செலவினம்**

| வரிசை எண். | தெருவிளக்கு விபரம் | எண்ணிக்கை | விலை விகிதம் ஒன்றுக்கு ஒரு வருடத்திற்கு (ரூ) | தொகை (ரூ) |
|---|---|---|---|---|
| 1 | 20W LED | 13558 | 231.00 | 3131898.00 |
| 2 | 40W LED | 3210 | 231.00 | 741510.00 |
| 3 | 90W LED | 81 | 231.00 | 18711.00 |
| 4 | 120W LED | 3227 | 231.00 | 745437.00 |
| 5 | 2000W LED | 294 | 231.00 | 67914.00 |
| | **மொத்தம்** | **20370** | | **47,05,470.00** |

**(b) இதர நிதியில் அமைக்கப்பட்ட உத்திரவாதம் முடிவுற்ற LED தெரு விளக்குகளை இயக்கி பராமரிக்க ஆகும் செலவினம்**

| வரிசை எண். | தெருவிளக்கு விபரம் | எண்ணிக்கை | விலை விகிதம் ஒன்றுக்கு ஒரு வருடத்திற்கு (ரூ) | தொகை (ரூ) |
|---|---|---|---|---|
| 1 | 40W LED | 5246 | 1007.16 | 5283561.36 |
| 2 | 45W LED | 123 | 1007.16 | 123880.68 |
| 3 | 70W LED | 220 | 1191.96 | 262231.20 |
| 4 | 90W LED | 1371 | 1580.04 | 2166234.84 |
| 5 | 100W LED | 53 | 1580.04 | 83742.12 |
| 6 | 120W LED | 770 | 1580.04 | 1216630.80 |
| 7 | 150W LED | 638 | 1653.93 | 1055226.48 |
| | **மொத்தம்** | **8421** | | **1,01,91,507.48** |
| | **மொத்தம் A+B** | **28791** | | **1,48,96,977.48** |

பார்வை 1–ல் கண்டுள்ள மாமன்ற தீர்மானத்தின்படி கூடுதல் விளக்குகள் அமைக்கவும் அதனை இயக்கி பராமரிக்கவும் மாமன்றம் அனுமதி வழங்கியுள்ளதன் பேரில் 01.01.2022 முதல், சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட 20,370 எண்ணிக்கையிலான LED தெருவிளக்குகளையும், இதர நிதியில் அமைக்கப்பட்ட 8421 எண்ணிக்கையிலான உத்திரவாதம் முடிவுற்ற LED தெருவிளக்குகளையும் அட்டவணை A மற்றும் Bல் கண்டுள்ளபடி நகராட்சி நிர்வாக ஆணையரின் 14.09.20–ம் தேதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ள விலை விகிதத்தின்படி இயக்கி பராமரிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:** | 1. கூடுதலாக அமைக்கப்பட்ட 28,791 எண்ணிக்கையிலான LED தெருவிளக்குகளை நகராட்சி நிர்வாக ஆணையரின் 14.09.2020–ம் தேதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ள விலை விகிதத்தின்படி அனுமதிக்கலாம்.<br><br>2.இணைக்கப்பட்ட 40 வார்டு பகுதிகளில் புதியதாக தெருவிளக்குகள் அமைக்கப்பட்டாலும் மேற்படி விலை விகிதத்தின்படி இயக்கி பராமரிக்க அனுமதிக்கலாம். |

ந.க.எண்.3478/2012/எம்.டி.3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 3 நாள் 13.01.2022**

அனுவலக குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 4**

கோயம்புத்தூர் மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மை பணிக்கு ஐந்து மண்டலத்திற்குட்பட்ட வார்டுப் பகுதிகளில் சேகரமாகும் குப்பைகளை அகற்றுவதற்கு குப்பைத் தொட்டிகள் மற்றும் அவற்றை கொண்டு செல்ல வாகனங்கள் ஆகியவற்றை, 15வது மத்திய நிதிக்குழு திட்டத்தின் கீழ் கொள்முதல் செய்வதற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, மாமன்றத்தீர்மான எண்.518 நாள்.30/11/2021ன்படி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் நிர்வாக அனுமதி வேண்டி கருத்துரு அனுப்பப்பட்டது. மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டுப் பகுதிகளில் சேகரமாகும் குப்பைகளை அகற்றுவதற்கு 100 எண்ணிக்கையிலான குப்பைத் தொட்டிகள் மற்றும் அவற்றை கொண்டு செல்வதற்கு 1 எண்ணிக்கையிலான 14 கனமீட்டர் கொண்ட காம்பேக்டர் (Compactor) வாகனம் கொள்முதல் செய்வதற்கு ரூ.88.56 இலட்சத்திற்கு கீழ்கண்ட பட்டியலில் உள்ளவாறு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ.எண். | பணிகளின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை ரூ (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் மாநகராட்சி, மத்திய மண்டலம் –1100 லிட்டர் கொண்ட குப்பைத் தொட்டிகள் – 100 எண்ணிக்கையில் கொள்முதல் செய்தல். **ந.க.எண். 376/2022/எம்டி.5** | 47.20 |
| 2 | கோயம்புத்தூர் மாநகராட்சி, மத்திய மண்டலம் – 1 எண்ணிக்கையிலான 14 கனமீட்டர் கொண்ட Compactor கொள்முதல் செய்தல். **ந.க.எண். 377/2022/எம்டி.5** | 41.36 |
| | **மொத்தம்** | **ரூ.88.56** |

திடக்கழிவு மேலாண்மைப் பணியின் அவசர அவசியம் கருதி காலதாமதத்தைத் தவிர்க்கும் பொருட்டு, மத்திய மண்டலத்திற்கு 100 எண்ணிக்கையிலான குப்பைத் தொட்டிகள் மற்றும் அவற்றை எடுத்துச்செல்ல 1 எண்ணிக்கையிலான 14 கனமீட்டர் கொண்ட Compactor வாகனம் கொள்முதல் செய்வதற்கும் அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.88.56 இலட்சத்திற்கும் நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம்.                ந.க.எண். 376/2022 /எம்டி5

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 4 நாள் 13.01.2022</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 5**

கோயம்புத்தூர் மாநகராட்சி – திடக்கழிவு மேலாண்மை பணிக்கு ஐந்து மண்டலத்திற்குட்பட்ட வார்டுப் பகுதிகளில் சேகரமாகும் குப்பைகளை அகற்றுவதற்கு குப்பைத் தொட்டிகள் மற்றும் அவற்றை கொண்டு செல்ல வாகனங்கள் ஆகியவற்றை, 15வது மத்திய நிதிக்குழு திட்டத்தின் கீழ் கொள்முதல் செய்வதற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, மாமன்றத்தீர்மான எண்.518 நாள்.30/11/2021 ன் படி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் நிர்வாக அனுமதி வேண்டி கருத்துரு அனுப்பப்பட்டது. கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டுப் பகுதிகளில் சேகரமாகும் குப்பைகளை அகற்றுவதற்கு 100 எண்ணிக்கையிலான குப்பைத் தொட்டிகள் மற்றும் அவற்றை கொண்டு செல்வதற்கு 1 எண்ணிக்கையிலான 14 கனமீட்டர் கொண்ட காம்பேக்டர் (Compactor) வாகனம் கொள்முதல் செய்வதற்கு ரூ.88.56 இலட்சத்திற்கு கீழ்கண்ட பட்டியலில் உள்ளவாறு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ.எண். | பணிகளின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை ரூ (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டலம் –1100 லிட்டர் கொண்ட குப்பைத் தொட்டிகள் – 100 எண்ணிக்கையில் கொள்முதல் செய்தல். **ந.க.எண். 368/2022/எம்டி.5** | 47.20 |
| 2 | கோயம்புத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டலம் – 1 எண்ணிக்கையிலான 14 கனமீட்டர் கொண்ட Compactor கொள்முதல் செய்தல். **ந.க.எண். 369/2022/எம்டி.5** | 41.36 |
| | **மொத்தம்** | **ரூ.88.56** |

திடக்கழிவு மேலாண்மைப் பணியின் அவசர அவசியம் கருதி காலதாமதத்தைத் தவிர்க்கும் பொருட்டு, கிழக்கு மண்டலத்திற்கு 100 எண்ணிக்கையிலான குப்பைத் தொட்டிகள் மற்றும் அவற்றை எடுத்துச்செல்ல 1 எண்ணிக்கையிலான 14 கனமீட்டர் கொண்ட Compactor வாகனம் கொள்முதல் செய்வதற்கும் அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.88.56 இலட்சத்திற்கும் நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண். 368/2022 /எம்டி5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 5 நாள் 13.01.2022**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 6

கோயம்புத்தூர் மாநகராட்சி – திடக்கழிவு மேலாண்மை பணிக்கு ஐந்து மண்டலத்திற்குட்பட்ட வார்டுப் பகுதிகளில் சேகரமாகும் குப்பைகளை அகற்றுவதற்கு குப்பைத் தொட்டிகள் மற்றும் அவற்றை கொண்டு செல்ல வாகனங்கள் ஆகியவற்றை, 15வது மத்திய நிதிக்குழு திட்டத்தின் கீழ் கொள்முதல் செய்வதற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, மாமன்றத்தீர்மான எண்.518 நாள்.30/11/2021 ன் படி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் நிர்வாக அனுமதி வேண்டி கருத்துரு அனுப்பப்பட்டது. வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டுப் பகுதிகளில் சேகரமாகும் குப்பைகளை அகற்றுவதற்கு 100 எண்ணிக்கையிலான குப்பைத் தொட்டிகள் மற்றும் அவற்றை கொண்டு செல்வதற்கு 1 எண்ணிக்கையிலான 14 கனமீட்டர் கொண்ட காம்பேக்டர் (Compactor) வாகனம் கொள்முதல் செய்வதற்கு ரூ.88.56 இலட்சத்திற்கு கீழ்கண்ட பட்டியலில் உள்ளவாறு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ.எண். | பணிகளின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை ரூ (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் மாநகராட்சி, வடக்கு மண்டலம் –1100 லிட்டர் கொண்ட குப்பைத் தொட்டிகள் – 100 எண்ணிக்கையில் கொள்முதல் செய்தல். **ந.க.எண். 372/2022/எம்டி.5** | 47.20 |
| 2 | கோயம்புத்தூர் மாநகராட்சி, வடக்கு மண்டலம் – 1 எண்ணிக்கையிலான 14 கனமீட்டர் கொண்ட Compactor கொள்முதல் செய்தல். **ந.க.எண். 373/2022/எம்டி.5** | 41.36 |
| | **மொத்தம்** | **ரூ.88.56** |

திடக்கழிவு மேலாண்மைப் பணியின் அவசர அவசியம் கருதி காலதாமதத்தைத் தவிர்க்கும் பொருட்டு, வடக்கு மண்டலத்திற்கு 100 எண்ணிக்கையிலான குப்பைத் தொட்டிகள் மற்றும் அவற்றை எடுத்துச்செல்ல 1 எண்ணிக்கையிலான 14 கனமீட்டர் கொண்ட Compactor வாகனம் கொள்முதல் செய்வதற்கும் அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.88.56 இலட்சத்திற்கும் நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண். 372/2022 /எம்டி5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 6 நாள் 13.01.2022**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 7

கோயம்புத்தூர் மாநகராட்சி – திடக்கழிவு மேலாண்மை பணிக்கு ஐந்து மண்டலத்திற்குட்பட்ட வார்டுப் பகுதிகளில் சேகரமாகும் குப்பைகளை அகற்றுவதற்கு குப்பைத் தொட்டிகள் மற்றும் அவற்றை கொண்டு செல்ல வாகனங்கள் ஆகியவற்றை, 15வது மத்திய நிதிக்குழு திட்டத்தின் கீழ் கொள்முதல் செய்வதற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, மாமன்றத்தீர்மான எண்.518 நாள்.30/11/2021 ன் படி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் நிர்வாக அனுமதி வேண்டி கருத்துரு அனுப்பப்பட்டது. தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டுப் பகுதிகளில் சேகரமாகும் குப்பைகளை அகற்றுவதற்கு 100 எண்ணிக்கையிலான குப்பைத் தொட்டிகள் மற்றும் அவற்றை கொண்டு செல்வதற்கு 1 எண்ணிக்கையிலான 14 கனமீட்டர் கொண்ட காம்பேக்டர் (Compactor) வாகனம் கொள்முதல் செய்வதற்கு ரூ.88.56 இலட்சத்திற்கு கீழ்கண்ட பட்டியலில் உள்ளவாறு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ.எண். | பணிகளின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை ரூ (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் மாநகராட்சி, தெற்கு மண்டலம் –1100 லிட்டர் கொண்ட குப்பைத் தொட்டிகள் – 100 எண்ணிக்கையில் கொள்முதல் செய்தல். **ந.க.எண். 374/2022/எம்டி.5** | 47.20 |
| 2 | கோயம்புத்தூர் மாநகராட்சி, தெற்கு மண்டலம் – 1 எண்ணிக்கையிலான 14 கனமீட்டர் கொண்ட Compactor கொள்முதல் செய்தல். **ந.க.எண். 375/2022/எம்டி.5** | 41.36 |
| | **மொத்தம்** | **ரூ.88.56** |

திடக்கழிவு மேலாண்மைப் பணியின் அவசர அவசியம் கருதி காலதாமதத்தைத் தவிர்க்கும் பொருட்டு, தெற்கு மண்டலத்திற்கு 100 எண்ணிக்கையிலான குப்பைத் தொட்டிகள் மற்றும் அவற்றை எடுத்துச்செல்ல 1 எண்ணிக்கையிலான 14 கனமீட்டர் கொண்ட Compactor வாகனம் கொள்முதல் செய்வதற்கும் அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.88.56 இலட்சத்திற்கும் நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண். 374 /2022 /எம்டி5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 7 நாள் 13.01.2022**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 8**

கோயம்புத்தூர் மாநகராட்சி – திடக்கழிவு மேலாண்மை பணிக்கு ஐந்து மண்டலத்திற்குட்பட்ட வார்டுப் பகுதிகளில் சேகரமாகும் குப்பைகளை அகற்றுவதற்கு குப்பைத் தொட்டிகள் மற்றும் அவற்றை கொண்டு செல்ல வாகனங்கள் ஆகியவற்றை, 15வது மத்திய நிதிக்குழு திட்டத்தின் கீழ் கொள்முதல் செய்வதற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, மாமன்றத்தீர்மான எண்.518 நாள்.30/11/2021 ன் படி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் நிர்வாக அனுமதி வேண்டி கருத்துரு அனுப்பப்பட்டது. மேற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டுப் பகுதிகளில் சேகரமாகும் குப்பைகளை அகற்றுவதற்கு 100 எண்ணிக்கையிலான குப்பைத் தொட்டிகள் மற்றும் அவற்றை கொண்டு செல்வதற்கு 1 எண்ணிக்கையிலான 14 கனமீட்டர் கொண்ட காம்பேக்டர் (Compactor) வாகனம் கொள்முதல் செய்வதற்கு ரூ.88.56 இலட்சத்திற்கு கீழ்கண்ட பட்டியலில் உள்ளவாறு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | பணிகளின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை ரூ (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலம் –1100 லிட்டர் கொண்ட குப்பைத் தொட்டிகள் – 100 எண்ணிக்கையில் கொள்முதல் செய்தல். **ந.க.எண். 370/2022/எம்டி.5** | 47.20 |
| 2 | கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலம் – 1 எண்ணிக்கையிலான 14 கனமீட்டர் கொண்ட Compactor கொள்முதல் செய்தல். **ந.க.எண். 371/2022/எம்டி.5** | 41.36 |
| | **மொத்தம்** | **ரூ.88.56** |

திடக்கழிவு மேலாண்மைப் பணியின் அவசர அவசியம் கருதி காலதாமதத்தைத் தவிர்க்கும் பொருட்டு, மேற்கு மண்டலத்திற்கு 100 எண்ணிக்கையிலான குப்பைத் தொட்டிகள் மற்றும் அவற்றை எடுத்துச்செல்ல 1 எண்ணிக்கையிலான 14 கனமீட்டர் கொண்ட Compactor வாகனம் கொள்முதல் செய்வதற்கும் அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.88.56 இலட்சத்திற்கும் நிர்வாக அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண். 370/2022 /எம்டி5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 8 நாள் 13.01.2022**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 9**

**பொருள்** : கோயம்புத்தூர் மாநகராட்சி – பொறியியல் பிரிவு – பாதாள சாக்கடைத்திட்டம் – உக்கடம் 70 MLD மற்றும் ஒண்டிபுதூர் 60 MLD கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை இயக்கி பராமரித்தல் மற்றும் உக்கடம், நஞ்சுண்டாபுரம் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் தொடர்புடைய பாதாள சாக்கடை கட்டமைப்புகளை இயக்கி பராமரித்தல் – போதுமான பணியாட்கள் நியமித்தல் – வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணி அமர்த்தல் – திருத்திய மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி கோருவது தொடர்பாக.

**பார்வை** : 1. கோயம்புத்தூர் மாநகராட்சி மாமன்றத் தீர்மான எண்.529 நாள்.30.11.2021.
2. இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.8937/2021/எம்டி2 நாள்.03.12.2021

*******

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதங்கள் ந.க.எண்.21787/2021/EA2 நாள்.02.10.2021 மற்றும் 16.11.2021ல், உள்ளாட்சி அமைப்புகளில் வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை பணியமர்த்துவதற்கு இனம் வாரியாக தேவையான பணியாளர்களின் விபரங்களை அறிக்கையாக சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டது.

பார்வை 1ல் காண் மாமன்றத் தீர்மான எண்.529 நாள்.30.11.2021ல் கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு பகுதிகளில் கழிவுநீர் அகற்றுதல் மற்றும் தொடர்புடைய கட்டமைப்புகளை இயக்கி பராமரித்தல் பணிகள் மேற்கொள்ள கீழ்க்கண்ட பணியாளர்களை வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு நியமனம் செய்யவும் அதுவகையில் ஆகும் உத்தேச செலவினம் ரூ.896.93 லட்சத்திற்கும் இப்பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பவும் மாமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. அதன்படி, பார்வை 2ல் காண் இவ்வலுவலக கடிதத்தில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு நிர்வாக அனுமதி வேண்டி கருத்துரு அனுப்பப்பட்டது.

| வ.எண் | பணியாளர்களின் விபரம் | தேவைப்படும் பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | நிலையப் பொறியாளர் (சிவில்) | 2 |
| 2 | மின்கண்காணிப்பாளர் | 2 |
| 3 | மின்பணியாளர் ( C Certificate) | 6 |
| 4 | மின்பணியாளர் ( B Certificate) | 3 |
| 5 | பராமரிப்பு பணியாளர் | 36 |
| 6 | புதைவடிகால் குழாய் ஆய்வாளர் | 10 |
| 7 | புதைவடிகால் சுத்தம் செய்பவர் | 19 |
| 8 | புதைவடிகால் பணியாளர் | 21 |
| 9 | ஓட்டுநர் | 108 |
| 10 | துலக்குநர் | 108 |
| | **மொத்தம்** | **315** |

இந்நிலையில், நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் **16.12.2021**ம் தேதிய ஆய்வுக்கூட்ட அறிவுரைகளில், உள்ளாட்சி அமைப்புகளில் வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை பணியமர்த்துவதற்கு திருத்திய மதிப்பீடு அனுப்பி வைக்க தெரிவித்ததை தொடர்ந்து, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் வாரியாக தேவைப்படும் பணியாளர்கள் விபரம் இனம் வாரியாக கீழ்க்கண்டவாறு பட்டியலிடப்பட்டுள்ளது.

**1. கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் (உக்கடம் 70 MLD மற்றும் ஒண்டிப்புதூர் 60 MLD)**
**2. உக்கடம், நஞ்சுண்டாபுரம் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் தொடர்புடைய கழிவுநீர் சேகரிப்பு கட்டமைப்புகள்**

| வ.எண் | பணியாளர்களின் விபரம் | தேவைப்படும் பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | நிலையப் பொறியாளர் (சிவில்) | 2 |
| 2 | மின்கண்காணிப்பாளர் | 2 |
| 3 | மின்பணியாளர் ( C Certificate) | 4 |
| 4 | மின்பணியாளர் ( B Certificate) | 8 |
| 5 | பராமரிப்பு பணியாளர் | 39 |
| 6 | புதைவடிகால் குழாய் ஆய்வாளர் | 8 |
| 7 | புதைவடிகால் சுத்தம் செய்பவர் | 5 |
| 8 | புதைவடிகால் பணியாளர் | 16 |
| 9 | ஓட்டுநர் | 26 |
| 10 | துலக்குநர் | 26 |
| | **மொத்தம்** | **136** |

எனவே, கோயம்புத்தூர் மாநகராட்சியில் உக்கடம் 70 MLD மற்றும் ஒண்டிபுதூர் 60 MLD கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை இயக்கி பராமரித்தல் மற்றும் உக்கடம், நஞ்சுண்டாபுரம் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் தொடர்புடைய பாதாள சாக்கடை கட்டமைப்புகளை இயக்கி பராமரிப்பு பணிகள் செய்வதற்கு மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு பணியாளர்களை நியமனம் செய்யவும் அது வகையில் உண்டாகும் உத்தேச செலவினம் ரூ.**394.23** லட்சத்திற்கும் நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு திருத்திய கருத்துரு **–1** அனுப்புவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு: 1.அனுமதிக்கலாம்

2. திருத்திய கருத்துரு **1–**ல் பணியாளர்கள் எண்ணிக்கை கீழ்க்கண்டவாறு கணக்கீடு செய்யப்பட்டுள்ளதை மாமன்றம் அனுமதிக்கலாம்.

| வ. எண் | விபரம் | முதலில் அனுப்பிய கருத்துரு | திருத்திய கருத்துரு –1 |
|---|---|---|---|
| 1. | கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் | 2 எண்ணிக்கை (உக்கடம் மற்றும் ஒண்டிப்புதூர்) | 2 எண்ணிக்கை (உக்கடம் மற்றும் ஒண்டிப்புதூர்) |
| 2. | கழிவுநீர் சேகரிப்பு குழாய் கட்டமைப்புகள் | 624.15 கி.மீ (உக்கடம் மற்றும் ஒண்டிப்புதூர்) | 475கி.மீ (உக்கடம் மற்றும் நஞ்சுண்டாபுரம்) |
| 3. | பிரதான கழிவுநீரேற்று நிலையம் | 2 எண்ணிக்கை | 2 எண்ணிக்கை |
| 4. | உப கழிவுநீரேற்று நிலையம் | 1 எண்ணிக்கை | 2 எண்ணிக்கை |
| 5. | சாலையோர கழிவுநீரேற்று நிலையம் | 15 எண்ணிக்கை | 15 எண்ணிக்கை |
| 6. | பக்கெட் கிளீனிங் வாகனம் | 21 எண்ணிக்கை | 16 எண்ணிக்கை |
| 7. | ஜெட்ராடு வாகனம் | 10 எண்ணிக்கை | 8 எண்ணிக்கை |
| 8. | சூப்பர் சக்கர் வாகனம் | 3 எண்ணிக்கை | 3 எண்ணிக்கை |

ந.க.எண். 8937/2021/எம்டி2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 9 நாள் 13.01.2022**

அலுவலகக் குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 10

| | | |
|---|---|---|
| **பொருள்** | **:** | கோயம்புத்தூர் மாநகராட்சி – பொறியியல் பிரிவு – பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படாத பகுதிகளில் **–** லாரிகள் மூலம் கழிவுநீர் அகற்றி சுத்திகரிப்பு நிலையத்தில் சேர்ப்பித்தல் தொடர்புடைய கட்டமைப்புகளை இயக்கி பராமரித்தல் **–** போதுமான பணியாட்கள் நியமித்தல் – வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணி அமர்த்தல் – திருத்திய மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி கோருவது தொடர்பாக. |
| **பார்வை** | **:** | **1.** கோயம்புத்தூர் மாநகராட்சி மாமன்றத் தீர்மான எண்.**529** நாள்.**30.11.2021.**<br>**2.** இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.**8937/2021**/எம்டி**2** நாள்.**03.12.2021** |

*******

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதங்கள் ந.க.எண்.**21787/2021**/EA2 நாள்.**02.10.2021** மற்றும் **16.11.2021**ல், உள்ளாட்சி அமைப்புகளில் வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை பணியமர்த்துவதற்கு இனம் வாரியாக தேவையான பணியாளர்களின் விபரங்களை அறிக்கையாக சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டது.

பார்வை **1**ல் காண் மாமன்றத் தீர்மான எண்.**529** நாள்.**30.11.2021**ல் கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு பகுதிகளில் கழிவுநீர் அகற்றுதல் மற்றும் தொடர்புடைய கட்டமைப்புகளை இயக்கி பராமரித்தல் பணிகள் மேற்கொள்ள கீழ்க்கண்ட பணியாளர்களை வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு நியமனம் செய்யவும் அதுவகையில் ஆகும் உத்தேச செலவினம் ரூ.**896.93** லட்சத்திற்கும் இப்பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பவும் மாமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. அதன்படி, பார்வை **2**ல் காண் இவ்வலுவலக கடிதத்தில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு நிர்வாக அனுமதி வேண்டி கருத்துரு அனுப்பப்பட்டது.

| **வ.எண்** | **பணியாளர்களின் விபரம்** | **தேவைப்படும் பணியாளர்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| 1 | நிலையப் பொறியாளர் (சிவில்) | 2 |
| 2 | மின்கண்காணிப்பாளர் | 2 |
| 3 | மின்பணியாளர் ( C Certificate) | 6 |
| 4 | மின்பணியாளர் ( B Certificate) | 3 |
| 5 | பராமரிப்பு பணியாளர் | 36 |
| 6 | புதைவடிகால் குழாய் ஆய்வாளர் | 10 |
| 7 | புதைவடிகால் சுத்தம் செய்பவர் | 19 |
| 8 | புதைவடிகால் பணியாளர் | 21 |
| 9 | ஓட்டுநர் | 108 |
| 10 | துலக்குநர் | 108 |
| | **மொத்தம்** | **315** |

இந்நிலையில், நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் **16.12.2021**ம் தேதிய அறிவுரைகளின்படி, உள்ளாட்சி அமைப்புகளில் வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை பணியமர்த்துவதற்கு திருத்திய மதிப்பீடு அனுப்பி வைக்க தெரிவித்ததை தொடர்ந்து, கழிவுநீர் சேகரிப்பு குழாய்கள் பதிக்கப்படாத பகுதிகளில் லாரிகள் மூலம் கழிவுநீர் அகற்றி சுத்திகரிப்பு நிலையத்தில் சேர்க்க தேவைப்படும் பணியாளர்கள் விபரம் இனம் வாரியாக கீழ்க்கண்டவாறு பட்டியலிடப்பட்டுள்ளது.

**கழிவுநீர் சேகரிப்பு குழாய்கள் பதிக்கப்படாத பகுதிகள்**

| வ.எண் | பணியாளர்களின் விபரம் | தேவைப்படும் பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | ஓட்டுநர் | 79 |
| 2 | துலக்குநர் | 79 |
| | **மொத்தம்** | **158** |

எனவே, கோயம்புத்தூர் மாநகராட்சியில் கழிவுநீர் சேகரிப்பு குழாய்கள் பதிக்கப்படாத பகுதிகளில் லாரிகள் மூலம் கழிவுநீர் அகற்றி சுத்திகரிப்பு நிலையத்தில் சேர்ப்பித்தல் தொடர்புடைய கட்டமைப்புகளை இயக்கி பராமரிப்பு பணிகள் செய்வதற்கு மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு பணியாளர்களை வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு நியமனம் செய்யவும், அது வகையில் உண்டாகும் உத்தேச செலவினம் ரூ.445.94 லட்சத்திற்கும் நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு திருத்திய கருத்துரு – 2 அனுப்புவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு: 1.அனுமதிக்கலாம்

2. திருத்திய கருத்துரு 1–ல் பணியாளர்கள் எண்ணிக்கை கீழ்க்கண்டவாறு கணக்கீடு செய்யப்பட்டுள்ளதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

| வ. எண் | விபரம் | முதலில் அனுப்பிய கருத்துரு | திருத்திய கருத்துரு–2 |
|---|---|---|---|
| 1. | கழிவுநீர் சேகரிப்பு குழாய் பதிக்கப்படாத பகுதிகள் | 2212.85 கி.மீ | 2362 கி.மீ |
| 2. | கழிவுநீர் அகற்றும் வாகனம் | 74எண்ணிக்கை | 79 எண்ணிக்கை |

ந.க.எண். 8937/2021/எம்டி2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 10 நாள் 13.01.2022**

அலுவலகக் குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 11

**பொருள் :** நிர்வாகம் - கல்வி – கோயம்புத்தூர் மாநகராட்சி – ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி திட்டத்தின்கீழ் மாதிரிப் பள்ளி 2022-23 - ம் கல்வியாண்டில் மாநகராட்சி இர.ச.புரம் இருபாலர் மேல்நிலைப் பள்ளியில் தங்கும் விடுதியுடன் அமைத்தல் - அனுமதி வேண்டுதல் மற்றும் நிதி ஒதுக்கீடு கோருதல் - சார்பாக.

**பார்வை :**
1. அரசாணை ( நிலை) எண்.222 பள்ளிக் கல்வி (SSA1) துறை, நாள்.24.10.2018
2. அரசாணை ( நிலை) எண்.220 பள்ளிக் கல்வி (SSA1) துறை, நாள்.19.12.2019
3. அரசாணை ( நிலை) எண்.164 பள்ளிக் கல்வி (SSA1) துறை, நாள்.29.11.2021

-----------

அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு சிறப்பான கல்வி வழங்க உலகத்தரத்திலான கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய மாதிரிப் பள்ளிகள் மாவட்டத்திற்கு 1 வீதம் அமைக்க பார்வை 1 மற்றும் 2-ல்காண் அரசாணைகளின்படி உத்தரவிடப்பட்டுள்ளது.

அரசுப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களின் கல்வி, நுண்கலை மற்றும் விளையாட்டுகளில் சிறந்து விளங்குவதற்கான வாய்ப்பை வழங்குவதற்கு ஏதுவாக பார்வை 3 -ல் காண் அரசாணையின்படி, முதற்கட்டமாக அரியலூர், கடலூர், தருமபுரி, கள்ளக்குறிச்சி, கிருஷ்ணகிரி, பெரம்பலூர், சேலம், திருச்சி, திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் ஆகிய 10 மாவட்டங்களில் உண்டு, உறைவிட வசதியுடன் கூடிய மாதிரிப் பள்ளிகள் அக்டோபர் 2021 முதல் துவக்கப்பட்டு, 12 –ம் வகுப்பு மாணவர்கள் (இருபாலர்) பயின்று வருகின்றனர்.

இப்பள்ளிகள் தமிழ்நாடு அனைவருக்கும் கல்வித் திட்டத்தில் சமாக்ரா சிக்ஷா திட்டத்தின் கீழ் செயல்பட்டு வருகின்றன. இப்பள்ளிகள் மற்றும் விடுதிகளுக்கு தேவையான அடிப்படை வசதிகள் செய்வதற்கான தொடர் மற்றும் தொடரா செலவினங்களுக்காக பள்ளி 1-க்கு ரூ.2,45,56,136/- அரசால் 2021-22- ம் கல்வியாண்டிற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு மேற்படி திட்டத்தின்கீழ் அமைக்கப்படவுள்ள மாதிரிப் பள்ளியினை மாநகராட்சி இர.ச.புரம் இருபாலர் மேல்நிலைப் பள்ளியில் அமைக்க தேர்வு செய்யலாம்.

எனவே கோயம்புத்தூர் மாவட்டத்தில் மேற்படி திட்டத்தின்கீழ் அமையவுள்ள மாதிரிப் பள்ளியினை மாநகராட்சி நிர்வாகத்தின்கீழ் செயல்படும் மாநகராட்சி இர.ச.புரம் இருபாலர் மேல்நிலைப்பள்ளியில் 2022-23-ம் கல்வியாண்டில் அமைத்திடவும், அதற்கென அடிப்படை வசதிகள் செய்வதற்கான தொடர் மற்றும் தொடரா செலவினங்களுக்குரிய நிதி ஒதுக்கீடு செய்து வழங்கவும் அரசைக் கோர மாமன்ற அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :- ஒப்புதல் அளிக்கலாம் எண். 470/2022/கே .11

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 11 நாள் 13.01.2022</u>**

ஒப்புதல் அளிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 12

கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு பகுதிகளில் **69** இடங்களில் நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் மையங்கள், சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் நிறுவ உத்தேசிக்கப்பட்டு **34** இடங்களில் கட்டுமான பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

ND LOGISTICS நிறுவனத்தின் இயக்குநர் திரு.சுரேஷ் பண்டாரி அவர்கள், தேவையான இயந்திரங்களை பயன்படுத்தி தனது வேலையாட்கள் மூலம் மட்கும் கழிவுகளை சேகரம் செய்து உரம் தயாரித்து கொள்வதாகவும், பொது மக்கள் ஆட்சேபனை தெரிவிக்காதவண்ணம் இயக்கப்படும் எனவும், அதற்கு மின்சாரம் வசதியுடன் கூடிய மூன்று MCC–களை வழங்குமாறு கடிதம் கொடுத்துள்ளார்.

மட்கும் கழிவுகளை சேகரம் செய்து உரம் தயாரிப்பது வரை பொது மக்கள் ஆட்சேபனை தெரிவிக்காத வண்ணம் மேற்கொள்ளவதாகவும், NDLOGISTICS நிறுவனம் உறுதி அளித்ததை ஏற்று மத்திய மண்டலம் வார்டு எண் **50,53**மற்றும் **54** வார்டுகளுக்கு சம்மந்தப்பட்ட நுண்ணுயிர் உரம் மையங்கள் **52**வது வார்டு சாஸ்திரி நகர் மயான பூமி வளாகத்தில் அமைந்துள்ள **5**TPD கொள்ளளவு கொண்ட MCC–களை **3**வருட காலத்திற்கு தனியார் ஏற்று நடத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம் ந.க.எண்.**11828/2018**/எம்.டி.**5**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 12 நாள் 13.01.2022</u>**

அனுமதி வழங்கப்பட்டது.

---

## பொருள் எண் 13

**பொருள்:-** கோயம்புத்தூர் மாநகராட்சியில் குடிநீர் விநியோக திட்டம் (எட்டு இணைக்கப்பட்ட பகுதிகளாகிய துடியலூர், வெள்ளகிணறு, சின்னவேடம்பட்டி, சரவணம்பட்டி, விளாங்குறிச்சி, காளப்பட்டி, குறிச்சி மற்றும் குனியமுத்தூர்) ரூ.**409.33** கோடிக்கு திருத்தப்பட்ட அரசு ஆணை எண்.G.O.(Ms).No.**38** MA &WS (MC –II) Department நாள் **12.04.18** அன்று நிர்வாக அனுமதி வழங்கியது. TNUDF கடன் **25%** சதவீதம் ரூ.**102.35** கோடி, PSGF மானியம் **13.80%** ரூ.**56.49** கோடி, மத்திய அரசின் AMRUT (SAAP-I) திட்டத்தில் மானியம் **31.88%** ரூ.**130.48** கோடி, தமிழக அரசின் AMRUT (SAAP-I) திட்டத்தில் மானியம் **19.32%** ரூ.**79.08** கோடி மற்றும் மாநகராட்சியின் பங்கு **10%** ரூ.**40.93** கோடி என்ற நிதி ஆதாரத்துடன் மேற்படி பணிகளை மேற்கொள்ள ஒப்புதல் அளித்தும் மற்றும் அதற்கான நிபந்தனைகளுக்கு மாநகர மன்ற தீர்மான எண்.**140** நாள். **07.05.2018**ன் படி மாமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. Kfw நிதி உதவி மூலம் TNUDF–லிருந்து (SMIF-TN-II-2) கடன் பெறுவதற்கான ஒப்பந்தம் **16.10.2021**–ல் காலாவதியானதால் கடன் பெறுவதற்கான ஒப்பந்தம் கால நீட்டிப்பு செய்ய மாமன்ற அனுமதி வேண்டுதல் – தொடர்பு.

**பார்வை:** கோயம்புத்தூர் மாநகராட்சி மாமன்ற தீர்மான எண்.**140** நாள்.**07.05.2018**

-------------

கோயம்புத்தூர் மாநகராட்சியில் குடிநீர் விநியோக திட்டம் (எட்டு இணைக்கப்பட்ட பகுதிகளாகிய துடியலூர், வெள்ளகிணறு, சின்னவேடம்பட்டி, சரவணம்பட்டி, விளாங்குறிச்சி, காளப்பட்டி, குறிச்சி மற்றும் குனியமுத்தூர்) ரூ.409.33 கோடிக்கு திருத்தப்பட்ட அரசு ஆணை எண்.G.O.(Ms).No.38 MA &WS (MC –II) Department நாள் 12.04.18 அன்று நிர்வாக அனுமதி வழங்கியது. TNUDF கடன் 25% சதவீதம் ரூ.102.35 கோடி, PSGF மானியம் 13.80% ரூ.56.49 கோடி, மத்திய அரசின் AMRUT (SAAP-I) திட்டத்தில் மானியம் 31.88% ரூ.130.48 கோடி, தமிழக அரசின் AMRUT (SAAP-I) திட்டத்தில் மானியம் 19.32% ரூ.79.08 கோடி மற்றும் மாநகராட்சியின் பங்கு 10% ரூ.40.93 கோடி என்ற நிதி ஆதாரத்துடன் மேற்படி பணிகளை மேற்கொள்ள ஒப்புதல் அளித்தும் மற்றும் அதற்கான நிபந்தனைகளுக்குட்பட்டு TNUDF மூலம் கடன் பெறுவதற்கு பார்வையில் கண்ட மாமன்ற தீர்மானத்தின்படி அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி திட்டப்பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் நடைபெற்று வருகிறது.

நிர்வாகப்பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால்வாரியம் /ஊரக குடிநீர்திட்ட பிரிவு கோவை மற்றும் நிர்வாகப்பொறியாளர் /ஊரக குடிநீர்திட்ட பிரிவு மற்றும் பெருந்திட்ட கோட்டம் அவர்களது காலவரிசை நிகழ்வுகள் மற்றும் தாமதத்திற்கான பல்வேறு காரணங்கள் குறிப்பிடப்பட்டதில் முக்கியமானவற்றை (Chronological Events and Reason for Delay) கீழ்க்கண்டவாறு கொடுக்கப்பட்டுள்ளது.

1. இரயில் தண்டவாளத்தின் குறுக்கே குழாய் பதிக்கும் பணிக்கு தெற்கு இரயில்வே நிலையம், சென்னை அவர்களிடமிருந்து அனுமதி பெறுவது மற்றும் தேசிய நெடுஞ்சாலைத்துறை சாலைகளில் குழாய்கள் பதிக்க அனுமதி பெறுவதில் தாமதம்.
2. கோவிட்–19 ஊரடங்கு உத்தரவு காரணமாக பணியாளர்கள் பணிக்கு வருவதில் ஏற்பட்ட தடையால் பணி முன்னேற்றம் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளது.
3. சட்டமன்ற தேர்தல் 27.02.2021–ல் வெளியிடப்பட்டதாலும் தேர்தல் விதி முறைகள் கடைபிடக்க வேண்டியதாலும் திட்ட பணிகள் தாமதமானதாகவும் குறிப்பிட்டுள்ளவற்றை மாமன்றத்தின் பார்வைக்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

நிர்வாகப்பொறியாளர்கள் /தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அவர்கள் குறித்த காலத்தில் பணிகள் முடிக்க இயலவில்லை எனவும் தமது காலவரிசை நிகழ்வுகளில் குறிப்பிட்டுள்ளார். மேற்படி திட்ட பணிகள் நிறைவேற்றி முடிக்கவும் நிதி பெறவும் நிதி நிலையை கருத்தில் கொண்டும் கால அவகாசம் 31.12.2022 வரை நீட்டிக்க கேட்டுக்கொண்டுள்ளார்.

Kfw நிதி உதவி மூலம் TNUDF–லிருந்து (SMIF-TN-II-2) கடன் பெறவதற்கான ஒப்பந்தம் 17.10.2018–ல் நிறைவேற்றப்பட்டது. (Agreement executed between Coimbatore Corporation and TNUITCL) 16.10.2021-ல் கடன் பெறுவதற்கான ஒப்பந்தம் காலாவதியானது. கடன் பெறுவதற்கான அனுமதிக்கப்பட்ட கடிதத்தின்படி (As per the loan sanction letter) கால அவகாசம் 31.12.2022 வரை நீட்டிப்பு செய்து கடன் பெறுவதற்கான ஒப்பந்தம் நிறைவேற்ற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:அனுமதிக்கலாம் ந.க.எண்.410/2015/ப.வ.(எம்)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 13 நாள் 13.01.2022**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 14**

**பொருள்:** கோயம்புத்தூர் மாநகராட்சி - கணினிபிரிவு - தமிழ்நாடு தகவல் தொழில்நுட்ப மின்னணு சேவை வழங்கல் விதிகள் 2016 ன் படி- மாநகராட்சியில் வழங்கப்படும் மின்னணு சேவைகளை அரசிதழில் வெளியீடு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டுவது - தொடர்பாக

**பார்வை** :
1. நகராட்சிநிர்வாக இயக்குநர், சென்னைஅவர்களின் கடித ந.க.எண்.17220/2017/WB நாள்.9.07.2021
2. தமிழ்நாடுதகவல் தொழில்நுட்ப மின்னணு சேவை வழங்கல் விதிகள் 2016 ன் (Tamil Nadu Information Technology, Electronic Service Delivery Rules 2016) விதி (5) துணைவிதி(1)

******

பார்வை (1) ல் காணும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடித்தத்தின்படி, கோயம்புத்தூர் மாநகராட்சியில் UTIS ( Urban Tree Information Systems) மென்பொருள் 18.08.2021 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு மின்னணு சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது.

பார்வை(2)ல் காணும் தமிழ்நாடு தகவல் தொழில்நுட்ப மின்னணு சேவை வழங்கல் விதிகள் 2016 ன் (Tamil Nadu Information Technology, Electronic Service Delivery Rules 2016) துணைவிதி(1) விதி (5) கீழ் https:// tnurbanepay.tn.gov.in/ மூலம் வழங்கப்படும் மின்னணு சேவைகள் குறித்த விவரங்களை கீழ்கண்ட அட்டவணையில் தெரிவித்துள்ளபடி கோயம்புத்தூர் மாவட்ட அரசிதழில் வெளியிட்டதற்கு மாமன்றத்தின் பின்னேற்பிற்காக பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

| **வ. எண்** | **மின்னணு முறையில் வழங்கக் கூடிய பொது சேவைகளின் பெயர்** | | | **சேவை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட அதிகாரி** |
|---|---|---|---|---|
| **1** | **2** | | | **3** |
| **1** | குடிநீர் கட்டணம் (Water Charges ) | 1 | புதிய குடிநீர் இணைப்பு (New Water Connection) | ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி |
| | | 2 | புதிய குடிநீர் இணைப்புக்கான கட்டணம் (Payment for Water Supply connection) | |
| **2** | கட்டிட அனுமதி (Building Plan Approval) | 1 | கட்டிட அனுமதி பணிக்கான முன்னேற்றம் (Building Plan Work Progress) | |
| | | 2 | மனைப் பிரிவு அங்கீகார கட்டணம் (LayoutApproval Payment) | |
| | | 3 | மனைப்பிரிவு அங்கீகாரம் கோருதல் (Layout Approval Request) | |
| | | 4 | கட்டிட அனுமதிக்கான கட்டிட உரிம கட்டணம் (Planning Permission with Building License Payment) | |
| | | 5 | கட்டிட அனுமதிக்கான உரிமம் (Building License Request) | |
| | | 6 | கட்டிட அனுமதிக்கான கட்டிட உரிமம் (12 மீட்டருக்கு கீழ்) (Planning Permission with Building License (Below 12 meter) | |
| | | 7 | கட்டிட அனுமதிக்கான கட்டிட உரிமம் (1200 சதுரடிக்கு கீழ்) Planning Permission with Building License (Below 1200 Sq.ft) | |
| | | 8 | தொழில் வல்லுநர் / டெவலப்பர்கள் சான்றிதழ் பதிவு (Registration of Professional/Developers Certificate) | |
| | | 9 | கட்டிட வரைபடம் புதுப்பித்தல் கோரிக்கை (Renewal Building Plan Request) | |
| | | 10 | கட்டிட வரைபடம் புதுப்பித்தல் கட்டணம் (Renewal Building Plan Payment) | ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி |
| | | 11 | தொழில் வல்லுநர்கள் / டெவலப்பரின் புதுப்பித்தல் பதிவு (Renewal Registration of Professional/ Developer) | |
| | | 12 | இயந்திர உரிமத்திற்கான கோரிக்கை Request for machinery License | |
| **5** | வர்த்தக உரிமம் (Trade License) | 1 | தொழில் உரிமம் பதிவு (Trade License Registration) | |
| | | 2 | தொழில் உரிமம் புதுப்பித்தல் - (Trade Renewal ) | |
| **6** | சொத்துவரி (Property Tax) | 1 | வரிவிதிப்பு முழு விவரம் (View Assessment History) | |
| | | 2 | புதிய சொத்துவரி கோரிக்கை (New Assessment of Property tax Request) | |
| | | 3 | சொத்துவரி கட்டணம் (Payment of Property Tax ) | |

| | | | | |
|---|---|---|---|---|
| **7** | தொழில் வரி (Professional Tax) | 1 | புதிய தொழில் வரிவிதிப்புக்கான கோரிக்கை (New Assessment Request) | |
| | | 2 | தொழில் வரி கட்டணம் (Payment of Professional Tax) | |
| **8** | பிறப்பு மற்றும் இறப்பு (Birth and Death) | 1 | எனது சான்றிதழ் (My Certificate) | |
| **9** | வரியில்லா இனங்கள் (Non Tax) | 1 | வரியில்லா இனங்கள் கட்டணம் (Payment of Non Tax) | |

அலுவலகக்குறிப்பு :அனுமதிக்கலாம். (ந.க.எண்.492/15/குவி6)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 14 நாள் 13.01.2022**

அனுமதிக்கப்பட்டது.

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------

**பொருள் எண் 15**

**பொருள் :** கோயம்புத்தூர் மாநகராட்சி – தெற்கு மண்டலம் -பொறியியல் பிரிவு – தமிழ்நாடு நகர்புர மேம்பாட்டு வாரிய வைப்பு நிதி பணி - வார்டு எண் **91**-க்குட்பட்ட செங்குளத்தின் கரையில் பாலக்காடு பிரதான சாலையில் இருந்து குளத்துபாளையம் வரையில் ஆர்.சி.சி தடுப்புச்சுவர் கட்டுதல், வழிதல் கதவடைப்பான் அருகில் ஆர்.சி.சி பாலம் கட்டுதல், தார்சாலை மற்றும் தெருவிளக்கு அமைத்தல் பணிகள் – மதிப்பீட்டுத் தொகை ரூ.**1448.28** இலட்சத்திற்கு - மறு ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதி கோருதல் **– தொடர்பாக.**

**பார்வை:**

1. பணி ஆணை நாள்.**26.02.2021.**
2. ஒப்பந்ததாரர்களின் கடித நாள். **22.11.2021** மற்றும் **21.12.2021.**
3. மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நகர்புர மேம்பாட்டு வாரியம் அவர்களின் கடித எண்.Q1/**2953**/2020 நாள் **03.11.2021.**
4. ஆணையாளர் அவர்களின் உத்தரவு நாள் **07.01.2022**

*****

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் **91** -க்குட்பட்ட செங்குளத்தின் கரையில் பாலக்காடு பிரதான சாலையில் இருந்து குளத்துபாளையம் வரையில் ஆர்.சி.சி தடுப்புச்சுவர் கட்டுதல், வழிதல் கதவடைப்பான் அருகில் ஆர்.சி.சி பாலம் கட்டுதல், தார்சாலை மற்றும் தெருவிளக்கு அமைத்தல் பணிகளுக்கு தமிழ்நாடு நகர்புர மேம்பாட்டு வாரியத்தின் “வைப்பு நிதி பணியாக” ரூ.**1448.00** இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, தலைமைப்பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் சென்னை அவர்களிடம் **12.02.2021** தேதியில் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு **24.02.2021** தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| சிப்பம் எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ.லட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்தாரர் |
|---|---|---|---|---|---|
| **4975 / 2019/ எம்டி.4**<br><br>சிப்பம் **1** | தெற்கு மண்டலம் வார்டு எண் **91**- க்குட்பட்ட செங்குளத்தின் கரையில் பாலக்காடு பிரதான சாலையில் இருந்து குளத்து பாளையம் வரையில் ஆர்.சி.சி. தடுப்புச்சுவர் கட்டுதல் | **675.00** | முதலாம் அழைப்பு **24.02.2021** | **1)**.தி/ள்.விஷ்ணு இன்ப்ரா ஸ்ட்ரக்சர்ஸ்<br>**8.54** % அதிகம்<br><br>**2)**.தி/ள்.கே.சி.பி இன்ஜினீயர்ஸ் பி லிட்<br>**4.98**% அதிகம் | தி/ள்.கே.சி.பி இன்ஜினீயர்ஸ் பி லிட்<br>**4.98**% அதிகம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4975 / 2019/ எம்டி.4<br><br>சிப்பம் 2 | தெற்கு மண்டலம் வார்டு எண் 91- க்குட்பட்ட செங்குளத்தில் வழிதல் கதவடைப்பான் அருகில் ஆர்.சி.சி. பாலம் கட்டுதல். | 350.00 | முதலாம் அழைப்பு 24.02.2021 | 1).தி/ள்.இகே இன்ப்ரா ஸ்ட்ரக்சர்ஸ் பி லிட் 4.97% அதிகம்<br><br>2). தி/ள்.கே.சி.பி இன்ஜினீயர்ஸ் பி லிட் 13.23% அதிகம் | தி/ள்.இகே இன்ப்ரா ஸ்ட்ரக்சர்ஸ் பி லிட் 4.97% அதிகம் |
| 4975 / 2019/ எம்டி.4<br><br>சிப்பம் 3 | தெற்கு மண்டலம் வார்டு எண் 91- க்குட்பட்ட செங்குளத்தின் கரையில் பாலக்காடு பிரதான சாலையில் இருந்து குளத்துபாளையம் வரையில் தார்சாலை அமைத்தல். | 375.00 | முதலாம் அழைப்பு 24.02.2021 | 1).தி/ள்.இகே இன்ப்ரா ஸ்ட்ரக்சர்ஸ் பி லிட் 4.98% அதிகம்<br><br>2). தி/ள்.கே.சி.பி இன்ஜினீயர்ஸ் பி லிட் 6.85% அதிகம் | தி/ள்.இகே இன்ப்ரா ஸ்ட்ரக்சர்ஸ் பி லிட் 4.98% அதிகம் |
| 1827 / 2021/ எம்டி.4<br><br>சிப்பம் 4 | தெற்கு மண்டலம் வார்டு எண் 91- க்குட்பட்ட செங்குளத்தின் கரையில் பாலக்காடு பிரதான சாலையில் இருந்து குளத்துபாளையம் வரையில் கம்பங்களுடன் கூடிய தெருவிளக்கு அமைத்தல். | 48.28 | முதலாம் அழைப்பு 24.02.2021 | 1).தி/ள்.ஆர்.வி.ஜி மெட்டல் இண்டஸ்ட்ரீஸ் 0.32% குறைவு<br><br>2).தி/ள்.எஸ்.எஸ். இன்ஜினீயர்ஸ் 0.06% குறைவு | தி/ள்.ஆர்.வி.ஜி மெட்டல் இண்டஸ்ட்ரீஸ் 0.32% குறைவு |

அவ்வாறு பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு 26.02.2021-ல் பணி ஆணை வழங்கப்பட்டது.

இந்நிலையில், செங்குளத்தின் குளக்கரையில் பணி மேற்கொள்ள பொதுப்பணி துறையின் "தடையின்மை சான்று" கோரி 05.07.2019, 26.04.2021 மற்றும் 16.06.2021 ஆகிய தேதிகளில் கடிதம் அனுப்பப்பட்டு, இது தொடர்பாக 30.12.2021 நாள் வரையில் பொதுப்பணித்துறையில் இருந்து எவ்வித பதில் கடிதம் பெறப்படாத நிலையில், பார்வை 2-ல் கண்டுள்ள கடிதங்களில் அதிக விலை ஏற்றத்தால் மேற்படி பணியினை தொடர இயலாத நிலை உள்ள காரணத்தால் பணியிலிருந்து தங்களை விடுவிக்க கோரி ஒப்பந்ததாரர்கள் தி/ள்.கே.சி.பி இன்ஜினியர்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்கள் 22.11.2021-ம் தேதியும், தி/ள்.ஈ.கே இன்ப்ராஸ்ட்ரக்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் அவர்கள் 21.12.2021 ம் தேதியும், கடிதம் வழங்கியுள்ளனர். மேலும், தி/ள்.ஆர்.வி.ஜி மெட்டல் இண்டஸ்ட்ரி நிறுவன உரிமையாளர் காலமாகி விட்டதால் அந்நிறுவனத்தினாலும் மேற்படி பணியை மேற்கொள்ள இயலாத நிலை உள்ளது.

எனவே, மேற்கண்ட சூழலில், அட்டவனையில் குறிப்பிட்டுள்ள வரிசை எண்.1, 2, மற்றும் 3 பணிகளுக்கான தகுதிவாய்ந்த அடுத்த ஒப்பந்ததாரர்கள் அவர்கள் சார்ந்த பணிகளை மேற்கொள்ள தயாராக இல்லாத காரணத்தினாலும், வரிசை எண் 4 ல் குறிப்பிட்டுள்ள பணிக்கான ஒப்பந்ததாரார் தி/ள்.ஆர்.வி.ஜி மெட்டல் இண்ட்ஸ்ரி உரிமையாளர் காலமாகிவிட்ட காரணத்தினாலும், பார்வை 3-ல் குறிப்பிட்டுள்ள மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நகர்புர மேம்பாட்டு வாரியம் அவர்கள் தனது கடிதத்தில் மேற்குறிப்பிட்ட பணிகளை விரைவாக துவங்க கோரியதன் அடிப்படையில், ஆணையாளர் அவர்களின் பார்வை 4-ல் கண்ட உத்தரவின்படி பணிகளின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட ஒப்பந்தபுள்ளிகளை ரத்து செய்து மறு ஒப்பந்தபுள்ளி கோர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் ந.க.எண். 4975 /2019/எம்டி.4

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 15 நாள் 13.01.2022</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 16

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.51-ல் பொன்னே வீதியில் முதல் தளம் கடை எண்.6-ஐ (154 சதுரடி) திரு.R.கயிலைராஜன் அவர்கள் 13.07.2021-ல் கடையை கொரோனா நோய்த் தொற்று காரணமாக நடத்த முடியவில்லை என மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டது – கடைக்கு செலுத்திய வைப்புத் தொகைகளை திரும்ப வழங்குதல் - கேட்பு நீக்கம் செய்தல் - பொது ஏலம்/மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் சேர்ப்பது – தொடர்பாக.

பார்வை :
1. மாமன்ற தீர்மான எண்.149 நாள்.08.06.2018.
2. திரு.R.கயிலைராஜன் அவர்களின் கடித நாள். 13.07.2021.
3. உதவி பொறியாளர் அவர்களின் குறிப்பு நாள்.25.09.2021.

-------------

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.51-ல் பொன்னே வீதியில் முதல் தளம் கடை எண்.6-ஐ (154 சதுரடி) திரு.R.கயிலைராஜன் அவர்களுக்கு பார்வை 1-ல் காணும் மாமன்ற தீர்மான எண்.149 நாள்.08.06.2018-ல் மாத வாடகை ரூ.21,200/-க்கு என மூன்றாண்டுகளுக்கு மாநகராட்சி விதிகளின் படி ஒப்படைக்கப்பட்ட நாள் முதல் 31.03.2021 வரை ஒதுக்கீடு செய்யப்பட்டு மேற்படி கடைகளுக்கு கீழ் குறிப்பிட்டவாறு வைப்புத்தொகைகள் மத்திய மண்டலத்தில் செலுத்தப்பட்டுள்ளது. மேலும், 2020-2021-ல் கொரோனா நோய்த்தொற்று காரணமாக மேற்படி கடையை ஏலத்தில் சேர்க்கப்படவில்லை.

<u>உரிம எண்.5134021 கடை எண்.6-க்கு செலுத்தப்பட்ட வைப்புத் தொகைகள் விபரம்</u>

| வ. எண் | கணக்கு தலைப்பு எண் | தொகை செலுத்திய விபரம் | இரசீது எண் | நாள் | தொகை ரூ |
|---|---|---|---|---|---|
| 1 | 4018 | வைப்புத்தொகை | 201708281747 | 28.08.2017 | 1,50,000/- |
| 2 | 4018 | ஒரு வருட வாடகை முன் வைப்புத் தொகை ரூ.2,54,400/-மின் வைப்புத் தொகை ரூ.1000/- மற்றும் அதிகப்படியாக செலுத்தியது ரூ.7120/- | 201708281762 | 28.08.2017 | 50,000/- |
| | | | 201708313219 | 31.08.2017 | 2,12,520/- |
| | | | | மொத்தம் | 4,12,520/- |

பார்வை 2-ல் காணும் கடிதத்தில் திரு.R.கயிலைராஜன் அவர்கள் கொரோனா தொற்று நோய் காரணத்தால் கடையை நடத்த முடியாது என தெரிவித்து மின்சார கட்டணம் செலுத்தி 31.10.2020 அன்று காலி செய்து கடையை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டது அதற்கான குறிப்பு பார்வை 3-ல் காணும் உதவி பொறியாளர் அவர்களிடம் பெறப்பட்டுள்ளது.

<u>செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகை கடை எண்.6 (உரிம எண்.5134021)</u>

கொரோனா தொற்று நோய் காரணமாக அரசாணை எண்.298 நாள். 02.09.2020-ல் 01.04.2020 முதல் 31.05.2020 வரை தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| மார்ச் 2020 முதல் அக்டோபர் 2020 வரை வாடகை நிலுவை (ரூ.21,200X6) | | =ரூ.1,27,200/- |
| மார்ச் 2020 முதல் அக்டோபர் 2020 வரை | சேவை வரி | =ரூ. 22,896/- |
| மார்ச் 2020 முதல் அக்டோபர் 2020 வரை | அபராத வட்டி | =ரூ. 3,816/- |
| | | ரூ.1,53,912/- |

மாநகராட்சி விதிகளின்படி கடை மூன்றாண்டு காலத்திற்கு மார்ச் 2021 வரை ஒதுக்கீடு செய்யப்பட்டது. மூன்றாண்டு காலம் நடத்தாமல் கடையை ஒப்படை செய்ததால் அவர் செலுத்திய வைப்புத் தொகை ரூ.1,50,000/-ஐ (இரசீது எண்..201708281747 நாள்.28.08.2017) பறிமுதல் செய்து மாநகராட்சி நிதியில் சேர்க்கவும், திரு.R.கயிலைராஜன் அவர்கள் செலுத்த வேண்டிய வாடகை நிலுவை, அபராதவட்டி மற்றும் GST தொகை ஆகமொத்தம் ரூ.1,53,912/-ஐ மாநகராட்சி வசம் உள்ள ஒரு வருட வாடகை வைப்புத்தொகைகளில் (ரூ.2,62,520/-) ஈடுகட்டி மீதம் உள்ள தொகை ரூ.1,08,608/- திரும்ப வழங்கவும், மேலும் மேற்படி கடைகளுக்கு வழங்கப்பட்ட உரிமத்தை இரத்து செய்யவும், கடைக்கு கணினியில் நவம்பர் 2020 முதல் உள்ள பின்வரும் கேட்புகளை நீக்கம் செய்து காலி என பதிவு செய்யவும், ஏல இனத்தில் சேர்க்கவும் அதற்கான செய்தித்தாள் விளம்பர கட்டண செலவினங்களை ஏற்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண்.3005/2021/அ2 (ம)

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 16 நாள் 13.01.2022</u>

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 17

| | |
|---|---|
| பொருள் | கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்டபட்ட வார்டு எண்.52-ல் டாக்டர் இராத கிருஷ்ணன் ரோடு தரை தளம் கடை எண்.5 மற்றும் 6-யை (118.25சதுரடி) திரு.M.கிருஷ்ணன் அவர்கள் 13.09.2021-ல் கொரோனா தொற்று நோய் காரணமாக கடையை நடத்த முடியவில்லை என மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டது – கடைக்கு செலுத்திய வைப்பு தொகைகளை திரும்ப வழங்குதல் - கேட்பு நீக்கம் செய்தல் - பொது ஏலம், மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் சேர்ப்பது தொடர்பாக |
| பார்வை | 1. மாமன்ற தீர்மான எண்.440 நாள்.31.08.2021<br>2. திரு.M.கிருஷ்ணன் அவர்களின் கடித நாள்.05.04.2021 மற்றும்13.09.2021.<br>3. இளம் பொறியாளர் அவர்களின் குறிப்பு நாள்.14.09.2021<br>------ |

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.52-ல் டாக்டர் இராத கிருஷ்ணன் ரோடு தரை தளம் கடை எண்.5 மற்றும் 6-யை (118.25சதுரடி) திரு.M.கிருஷ்ணன் அவர்களுக்கு மாமன்ற தீர்மான எண்.98 நாள்.28.05.2008-ல் மாத வாடகை ரூ.7890/-க்கு கடை ஒன்றுக்கு என மூன்றாண்டுகளுக்கு மாநகராட்சி விதிகளின்படி ஒதுக்கீடு செய்யப்பட்டு மேற்படி கடைகளுக்கு கீழ் குறிப்பிட்டவாறு வைப்புத்தொகைகள் வடக்கு மண்டலத்தில் செலுத்தப்பட்டுள்ளது. மேலும், 2020-2021-ல் கொரோனா நோய்த்தொற்று காரணமாக மேற்படி கடையை ஏலத்தில் சேர்க்கப்படவில்லை.

<u>உரிம எண்.5240275 கடை எண்.5-க்கு செலுத்தப்பட்ட வைப்புத்தொகைகள் விரபம்</u>

| வ. எண். | கணக்கு தலைப்பு எண். | தொகை செலுத்திய விபரம் | இரசீது எண் | நாள் | தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | 4018 | வைப்புத்தொகை | 200805300778 | 30.05.2008 | 50,000/- |
| 2 | 4018 | காப்புத்தொகை | | | 40,000/- |
| 3 | 4018 | ஒரு வருட வாடகை முன் வைப்புத்தொகை | 200807290281 | 29.07.2008 | 94,680/- |

<u>உரிம எண்.5240276 கடை எண்.6-க்கு செலுத்தப்பட்ட வைப்புத்தொகைகள் விரபம்</u>

| வ. எண். | கணக்கு தலைப்பு எண். | தொகை செலுத்திய விபரம் | இரசீது எண் | நாள் | தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | 4018 | வைப்புத்தொகை | 200805300779 | 30.05.2008 | 50,000/- |
| 2 | 4018 | காப்புத்தொகை | | | 40,000/- |
| 3 | 4018 | ஒரு வருட வாடகை முன் வைப்புத்தொகை | 200807290332 | 29.07.2008 | 94,680/- |

பார்வை (1)-ல் காணும் மாமன்ற தீர்மானத்தின் படி 31.03.2020-ல் மூன்றாண்டுகள் முடிவடைவதால் 01.04.2020 முதல் 31.03.2023 வரை அரசாணை எண்.92 ந.நி.ம.கு.வ துறை நாள்.03.07.2007-ன் படி உரிமம் புதுப்பிக்கப்பட்டுள்ளது. உயர்வு செய்யப்பட்ட வாடகை வித்தியா தொகை இரண்டு கடைகளுக்கும் கீழ் குறிப்பிட்டவாறு செலுத்தப்பட வேண்டும்.

<u>செலுத்தப்பட வேண்டிய நிலுவைத்தொகை கடை எண்.5 (உரிம எண்.5240275)-</u>

கொரோனா தொற்று நோய் காரணமாக அரசாணை எண்.298 நாள். 02.09.2020-ல் 01.04.2020 முதல் 31.05.2020 வரை தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| ஜுன் 2020 முதல் மே 2021 வரை வாடகை நிலுவை<br>(ரூ.13800 – 12000 = 1800 x 12 ) | =ரூ. 21,600/- |
| ஜுன் 2021 முதல் செப்டம்பர் 2021 வரை வாடகை(4x13800) | =ரூ. 55,200/- |
| ஜுன் 2020 முதல் செப்டம்பர் 2021 வரை சேவை வரி | =ரூ. 13,824/- |
| | -------------------- |
| | ரூ.90,624 |
| | --------------- |

<u>செலுத்தப்பட வேண்டிய நிலுவைத்தொகை கடை எண்.6 (உரிம எண்.5240276)-</u>

கொரோனா தொற்று நோய் காரணமாக அரசாணை எண்.298 நாள். 02.09.2020-ல் 01.04.2020 முதல் 31.05.2020 வரை தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| ஜுன் 2020 முதல் மே 2021 வரை வாடகை நிலுவை (ரூ.13800 – 12000 = 1800 x 12 ) | =ரூ. 21,600/- |
| ஜுன் 2021 முதல் செப்டம்பர் 2021 வரை வாடகை (4x13800) | =ரூ. 55,200/- |
| ஜுன் 2020 முதல் செப்டம்பர் 2021 வரை சேவை வரி | =ரூ. 13,824/- |
| | ரூ.90,624/- |

பார்வை (2)-ல் காணும் கடிதத்தில் திரு.M.கிருஷ்ணன் அவர்கள் கொரோனா தொற்று நோய் காரணத்தால் கடையை நடத்த முடியாது என தெரிவித்துள்ளார். மேலும் இரண்டு கடைகளுக்கு இடையில் உள்ள மதில் சுவர் அகற்றி ஒரே கடையாக உபயோகப்படுத்தி வந்தால் மாநகராட்சி விதிகளின் படி அகற்றி சுவற்றினை புதியதாக கட்டி 13.09.2021-ல் கடைகளை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டது அதற்கான குறிப்பு பார்வை (3)-யில் காணும் இளம் பொறியாளர் அவர்களிடம் பெறப்பட்டுள்ளது. கடைஎண்.5 மற்றும் 6 ஆகியவைகளுக்கு மே மாதம் 2021 வரை வாடகை நிலுவையின்றி செலுத்தப்பட்டுள்ளது. உரிமம் புதுப்பிக்கப்பட்டு மூன்றாண்டு காலம் நடத்தாமல் ஒப்படை செய்ததால் அவர்கள் செலுத்திய வைப்புத்தொகை ரூ.1,00,000/-யை (கடை எண்.5-க்கு ரூ.50,000/- மற்றும் கடை எண்.6-க்கு ரூ.50,000/-) பறிமுதல் செய்து மாநகராட்சி நிதியில் சேர்க்கவும். திரு.M.கிருஷ்ணன் அவர்கள் காப்புத்தொகை ரூ.40,000/- மற்றும் ஒரு வருட வாடகை முன் வைப்புத்தொகை ரூ.94,680/- ஒவ்வொரு கடைக்கும் செலுத்தியுள்ளதில் மேற்படி கடைக்கு செலுத்த வேண்டிய மேற்படி நிலுவை தொகையில் அபாரத வட்டியை பிடித்தம் செய்து மீதமுள்ள தொகையினை திரும்ப வழங்கவும் மேலும் மேற்படி கடைகளுக்கு வழங்கப்பட்ட உரிமத்தை இரத்து செய்யவும், கடைகளுக்கு கணினியில் அக்டோபர் 2021 முதல் உள்ள பின்வரும் கேட்புகளை நீக்கம் செய்து காலி என பதிவு செய்யவும், கடையினை ஏல இனத்தில் சேர்த்து பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரவும் அதற்கான செய்தித்தாள் விளம்பர கட்டண செலவினங்களை ஏற்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- அனுமதிக்கலாம் ந.க.எண்.1964/2021/அ2(ம)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 17 நாள் 13.01.2022</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 18**

கோயம்புத்தூர் மாநகராட்சி, சங்கனூர் பள்ளம் மேம்படுத்துதல் பணியில், சங்கனூர் பள்ளத்தினை நேராய்வு செய்து, பணி துவங்கிய பொழுது, சுமார் **2.0**m ஆழம் வரை எவ்விதமான கெட்டி மண் ( hard rock ) தென்படவில்லை. எனவே gabion wall and stone pitching பணியில் கான்க்ரீட் தளம் அமைக்காமல் stone pitching மற்றும் gabion flooring அமைத்தல், புற்கள் மற்றும் இதர செடி, கொடிகள், மரங்கள் வளர்ந்து கழிவுநீர் செல்ல வழியின்றி கழிவுநீர் தேக்கம் ஏற்படும். மேலும், கழிவுநீரினை சுத்தம் செய்ய எவ்வித இயந்திரங்களையோ, பொருட்களையோ இறக்கி, ஈடுபடுத்தி பணி செய்ய இயலாது. அவ்வாறு செய்தால் Stone Pitching செய்த கற்கள் இடம் பெயர்ந்து மேடுபள்ளங்கள் ஏற்படும், மேலும் gabion side wall அமைக்கும் பணியில், கான்க்ரீட் தளம் அமைக்காமல், பணி செய்தால், Settlement Problem ஏற்படும்.

எனவே, மேற்படி குறைபாடுகள், களத்தில் பணி செய்யும் பொழுது கண்டறியப்பட்டதால், RCC மற்றும் PCC தளம் அமைத்து அதன்மேல் gabion wall அமைக்க மாற்று திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளது. இதற்கான தோராய மதிப்பீடு தயார் செய்யும் பொழுது அனுமதிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.**49** கோடியில் இருந்து, ரூ.**54.50** கோடி ரூபாய் கூடுதல் மதிப்பீடு ஆகிறது. இதில் கூடுதலாக PCC தளம் அமைக்கும் பணி, Wet mix தளம் அமைக்கும் பணி, RCC தளம் மற்றும் அஸ்திவாரம்/ அடித்தளம் ஆகிய பணிகள் செய்ய வேண்டியுள்ளது.

எனவே, இந்த கூடுதல் பணிகளுக்கு உண்டாகும் செலவுத் தொகையை மாநகராட்சி பொது நிதியில் இருந்து ஏற்பாடு செய்யவும், ஒப்புதல் வழங்கப்பட்ட இனங்களில் கூடுதலாகவும், புதியதாகவும் பணி மேற்கொள்ள ஒப்புதல் வேண்டியும், மேற்படி கூடுதல் இனங்களில் பணி மேற்கொள்ள அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநரகத்திற்கு பிரேரணை சமர்ப்பிக்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** ஒப்புதல் வழங்கலாம் ந.க.எண். **3615/2012**/Pakage -1 ஜே.என்.**4**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 18 நாள் 13.01.2022</u>**

ஒப்புதல் வழங்கப்பட்டது.

---

## பொருள் எண் 19

| | |
|---|---|
| பொருள் - | கோயம்புத்தூர் மாநகராட்சி –பெண்களுக்கு 50 சதவீதம் ஒதுக்கீடு செய்யப்பட்டது - நிலைக்குழுக்கள்- பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கை நிர்ணயம் செய்தல் - தொடர்பாக |
| பார்வை - | 1) அரசு ஆணை எண் 88 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (தேர்தல்) துறை நாள் 6.3.2002 |
| | 2)மாநகராட்சி நிலைக்குழுக்கள் அமைப்பதற்கான விதிகள் 1997ன் விதி 4 மற்றும் 5 |
| | 3) கோயம்புத்தூர் மாநகராட்சி மாமன்ற தீர்மானம் எண் 122 நாள் 1.11.2011 |
| | 4) தமிழ்நாடு அரசிதழ் எண் 545 நாள் 22.11.2021 |

------------------

பார்வை 1-இல் காணும் அரசு ஆணை எண் 88 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (தேர்தல்) துறை நாள் 6.3.2002ன்படி, கோயம்புத்தூர் மாநகராட்சியில் கீழ்க்கண்ட 6 நிலைக்குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

1. கணக்குகள் குழு
2. கல்வி பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழு
3. சுகாதாரக்குழு
4. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு
5. நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழு
6. பணிகள் குழு.

பார்வை 2-ல் காணும் மாநகராட்சி நிலைக்குழுக்கள் அமைத்தல் விதிகள் 1997ன், விதி 4-இன்படி மாநகராட்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ள நிலைக்குழுக்களின் உறுப்பினர்களின் எண்ணிக்கையினை குறைந்தபட்சம் 6, உயர்ந்தபட்சம் 15 என்ற வரம்பிற்குட்பட்டு மாமன்றம் நிர்ணயம் செய்து கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து பார்வை 3-ல் காணும் கோயம்புத்தூர் மாநகராட்சி மாமன்ற தீர்மானத்தின்படி,

(i). கணக்குகள் குழு
(ii) கல்வி, பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழு
(iii) சுகாதாரக்குழு

ஆகிய மூன்று குழுக்களில் உறுப்பினர்களின் எண்ணிக்கை 9 (ஒன்பது) என நிர்ணயம் செய்து, இம்மூன்று குழுக்களில் ஒவ்வொரு குழுவிலும் பெண் உறுப்பினர்களுக்கான ஒதுக்கீடு 3 (மூன்று) உறுப்பினர்கள் என நிர்ணயம் செய்தும்,

(iv) வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு,
(v) நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழு
(vi) பணிகள் குழு

ஆகிய மூன்று குழுக்களில் உறுப்பினர்களின் எண்ணிக்கை 15 (பதினைந்து) என நிர்ணயம் செய்து, இம்மூன்று குழுக்களில் ஒவ்வொரு குழுவிலும் பெண் உறுப்பினர்களுக்கான இட ஒதுக்கீடு 5 (ஐந்து) உறுப்பினர்கள் என நிர்ணயம் செய்தும் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது என தெரிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட மாமன்ற தீர்மானத்தின்படி, 6 நிலைக்குழுக்களின் உறுப்பினர்களின் எண்ணிக்கையின் விபரம் கீழ்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

| வ.எண் | நிலைக்குழுவின் பெயர் | உறுப்பினர்களின் எண்ணிக்கை விபரம் | ஒதுக்கீடு செய்யப்பட்ட பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கை (மூன்றில் ஒரு பங்கு) |
|---|---|---|---|
| 1 | கணக்குகள் குழு | 9 | 3 |
| 2 | கல்வி பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழு | 9 | 3 |
| 3 | பொது சுகாதாரக்குழு | 9 | 3 |
| 4 | வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு | 15 | 5 |
| 5 | நகரமைப்புக்குழு | 15 | 5 |
| 6 | பணிகள் குழு | 15 | 5 |

பார்வை 4-இல் காணும் தமிழ்நாடு அரசிதழின்படி, நிலைக்குழு உறுப்பினர்களில் பெண் உறுப்பினர்களுக்கான ஒதுக்கீடு 50 சதவீதத்திற்கு குறையாமல் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி அரசிதழின்படி, நிலைக்குழுவில் பெண் உறுப்பினர்களுக்கான ஒதுக்கீடு 50 சதவீதத்திற்கு குறையாமல் கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதற்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

| வ.எண் | நிலைக்குழுவின் பெயர் | உறுப்பினர்களின் எண்ணிக்கை தற்போது உள்ளது (எண்ணிக்கை) | இட ஒதுக்கீடு மாற்றி அமைக்கும்போது பெண் உறுப்பினர்களுக்கான இட ஒதுக்கீடு 50 சதவீதம் (எண்ணிக்கை) |
|---|---|---|---|
| 1 | கணக்குகள் குழு | 9 | 5 |
| 2 | கல்வி பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழு | 9 | 5 |
| 3 | பொது சுகாதாரக்குழு | 9 | 5 |
| 4 | வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு | 15 | 8 |
| 5 | நகரமைப்புக்குழு | 15 | 8 |
| 6 | பணிகள் குழு | 15 | 8 |

அலுவலகக் குறிப்பு - ஒப்புதல்அளிக்கலாம். ந.க.எண் 4535/2021/ எம்.சி. 8

**மாநகர மன்ற தீர்மானம் எண் 19 நாள் 13.01.2022**

ஒப்புதல் அளிக்கப்பட்டது.

---

(ஒப்பம்) ராஜ கோபால் சுன்கரா,
தனி அலுவலர்
கோயம்புத்தூர் மாநகராட்சி